செ.வெ. எண்: 1015 நாள்: 21.11.2008

# பத்திரிக்கைச் செய்தி

## பட்டய (Diploma) தேர்வுகளை எழுத முன்னாள் மாணவர்களுக்கு இறுதி வாய்ப்பு

தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகளில் பட்டய (டிப்ளோமா) படிப்பு பயின்ற முன்னாள் மாணவர்களில் 5 இலக்க பதிவு எண் மற்றும் 1 இலட்சம் முதல் 1950000 வரை பதிவு எண் கொண்ட முன்னாள் பகுதி நேர மாணவர்களும் மற்றும் 5 இலக்க பதிவு எண், 1 இலட்சம் முதல் 2085197 வரை பதிவு எண் கொண்ட முன்னாள் முழுநேர மாணவர்கள் அனைவருக்கும் தேர்ச்சி பெறாத பாடங்களில் சிறப்பு தேர்வு எழுத கருணை அடிப்படையில் தமிழக அரசு ஜனவரி 2009 முதல் ஆறு மாத இடைவெளியில் சிறப்பு தேர்வு எழுத *மூன்று வாய்ப்புகள்* அளித்துள்ளது. மேற்கண்ட தேர்வு எழுத காலக்கெடு முடிந்த பின்பு, முன்னாள் மாணவர்களுக்கு இத்தகைய வாய்ப்பு எக்காரணம் கொண்டும் மீண்டும் அளிக்கப்படமாட்டாது. ஆகவே, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பட்டய (டிப்ளோமா) தேர்வுகளில் முழுமையாகத் தேர்ச்சி பெறத்தவறிய முன்னாள் மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் பதிவுக்கட்டணம் மற்றும் மதிப்பெண்தாளுக்கான கட்டணத்துடன், தேர்வு எழுதும் பாடம் ஒன்றிற்கு ரூ.500/– வீதம் தேர்வுக்கட்டணம் செலுத்தவேண்டும்.

இவ்வாய்ப்பைப் பயன்படுத்தவுள்ளவர்கள் தேர்வு எழுத கருணை அடிப்படையில் தங்களுக்கு அளிக்கப்படும் இறுதி வாய்ப்பு இதுவே என்பதை அறிவேன் என்றும்; இனி வருங்காலங்களில் தேர்வு எழுத கூடுதல் வாய்ப்பு எதுவும் கோரமாட்டேன் என்றும் தேர்வு வாரியத் தலைவருக்கு எழுத்து மூலம் உறுதிமொழி அளிக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| தேர்வுக்கட்டணத்தை அபராதமின்றி செலுத்த கடைசி நாள் | : | 1.12.2008 |
| தேர்வுக்கட்டணத்தை ரூ100/– அபராதத்துடன் செலுத்த கடைசி நாள் | : | 8.12.2008 |
| தேர்வுக்கட்டணத்தை ரூ500/– அபராதத்துடன் தட்கல் முறையில் செலுத்த கடைசி நாள் | : | 26.12.2008 |
| தேர்வு துவங்கும் நாள் | : | 5.1.2009 |

இது குறித்த கூடுதல் விவரங்களை தாங்கள் பயின்ற பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்களை அணுகித் தெரிந்து கொள்ளலாம். தேர்வுக்கட்டணங்கள், உரிய விண்ணப்பம் மற்றும் உறுதிமொழியுடன் அவரவர் பயின்ற கல்லூரிகளில் குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்தப்படவேண்டும். 26.12.2008–க்குப்பின் எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வுக்கட்டணம் பெறப்படமாட்டாது.

குறிப்பு: தேர்வு விண்ணப்ப படிவம் மற்றும் தேர்வு மையங்களின் விவரங்களை www.tndte.gov.in இணையதளத்தில் பெறலாம்.

((ஒம்/–) வி.கே.ஜெயக்கொடி
முதன்மை செயலாளர்/ஆணையர் மற்றும் தேர்வு வாரிய தலைவர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

முதன்மை செயலாளர்/ஆணையர் மற்றும் தேர்வு வாரிய தலைவருக்காக